தமிழ் திசை

# புண்ணியம் தேடுவோமே..!

தமிழக
திருத்தலங்கள்...



முன்னூர் கோ. ரமேஷ்

# 28

# குபேரன் வணங்கிய அன்னம்புத்தூர் நிதீஸ்வரப் பெருமான்!

வேத, இதிகாச, புராண காலத்திற்குப்பின்னர் நம் பாரத தேசத்தை ஆண்ட இந்து மதத்தின் மீது ஈடுபாடு கொண்ட மன்னர்கள் பழைமை வாய்ந்த திருக்கோயில்களைப் பாதுகாத்து புனர்நிர்மாணமும் செய்து வந்தனர்.

இதனால் தமிழகத்தில் உள்ள சிறிய கிராமமாக இருந்தாலும், அந்த ஊரில் கற்பனை செய்துகூட பார்க்க முடியாத அளவிற்கு அழகான திருக்கோயில் எழிலோடு கூடிய கலைநயத்தோடு நிர்மாணிக்கப்பட்டிருக்கும். **"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என்ற முதுமொழிக்கு ஏற்ப தமிழகத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களில்கூட, ஏதாவது ஒரு திருக்கோயில் விண்ணைமுட்டும் கோபுரத்துடன் அழகுற அமைந்திருக்கும்.



ஆனால், நாட்டுப்பற்றும், பக்தியும் கொண்ட இம்மன்னர்களின் காலத்திற்குப் பின்னர், ஏற்பட்ட அந்நிய நாட்டுப் படையெடுப்புகள் மற்றும் ஆட்சி மாற்றங்களின் காரணமாகப் பல கோயில்கள் க்ஷீண நிலையை அடைந்தன. பல திருக்கோயில்களில் அருள்பாலித்த கலைநயம் மிக்க மூலவர் மற்றும் உற்சவர் சிலைகள் படையெடுப்புகளின்போது அந்நிய நாட்டு அரசர்களால் சிதைக்கப் படுவதிலிருந்து பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் மிகப்பெரிய பள்ளங்களைத் தோண்டி திருக்கோயில் இருந்த சுவடே தெரியாமல் மண்ணில் மறைத்து வைக்கப்பட்டது.

காலப்போக்கில் அடுத்து வந்த சந்ததியினருக்கு, மிகப் புராதனமான சக்தி வாய்ந்த இத்திருமேனிகள்

மண்ணில் மறைந்து கிடப்பது தெரியாமல் போய்விட்டது. இதனால் தான், தற்போது தமிழகத்தின் எந்த ஒரு பகுதியிலும் ஏதாவது ஒரு காரணத்திற்காக பூமியில் இயந்திரங்களால் தோண்டும்போது குவியல் குவியலாக இறைவனின் திருமேனிகளும், ஐம்பொன் சிலைகளும் கிடைத்தவண்ணம் உள்ளன.



**மண்ணில் மறைந்திருந்த மாமணிச் சோதியான்!**

இதுபோன்றே சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் (ஜுலை 2008) திருக்கயிலைநாதனின் புதையுண்ட பிரம்மாண்டமான திருக்கோயில் திண்டிவனத்திற்கு அருகே **அன்னம்புத்தூர்** என்ற கிராமத்தில் இந்திய தொல்லியல் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அன்னம்புத்தூர் கிராமத்தில் உள்ள மண்மேடு ஒன்றில் நீண்ட காலமாக சிவபெருமானின் திருமேனி ஒன்று இருப்பதையும், அச்சிலைக்கு அருகில் கோயிலின் சிதைந்த பகுதிகள் தெரிவதையும் கிராம மக்கள் இந்திய தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பிரிவிற்குத் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, இக்கிராமத்திற்குச் சென்று ஆய்வு செய்த தொல்லியல் துறையினர், லிங்கத் திருமேனி உள்ள மண்மேடு கோயிலின் சிதைந்த பகுதி என்பதையும் சிதைந்திருந்த கோயில் அதிட்டானத்தின் குமுதவரியில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதலாம் ராஜராஜசோழனின் கல்வெட்டு இருந்ததையும் கண்டுபிடித்தனர்.

இக்கல்வெட்டைப் படியெடுத்து ஆய்வு செய்ததில், முதலாம் ராஜராஜசோழனின் 23-ஆவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டைச் செதுக்கியிருப்பதும் இதன் காலம் கி.பி. 1008 என்றும் கண்டுபிடிக்கப்பட்டது. முதலாம் ராஜராஜசோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் இக்கல்வெட்டில் இத்திருக்கோயில் இறைவனின் திருநாமம் **திருநிதீஸ்வரர்** என்பது தெரியவந்தது. இத்திருக்கோயில் முதலாம் ராஜராஜசோழனின் காலத்திற்கு முன்பே பல்லவ மன்னர்களின் காலத்திலும் திருப்பணி செய்யப்பட்டிருப்பதைக் கோயிலின் அடித்தளத்திலிருந்த பெரிய அளவிலான செங்கற்கள் மூலமும், திருக்கோயிலின் அருகில் கிடைக்கப்பெற்ற ஸ்ரீ விநாயகப் பெருமானின் திருமேனியினாலும் அறிய முடிந்தது. மேலும் பல்லவர்கள் காலத்தைச் சார்ந்த சப்த மாதர்களின் சிற்பங்களும் இத்தலத்தில் தொல்லியல் துறையால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு காலத்தில் மிகப்பெரிய கோயிலாக விளங்கிய அன்னம்புத்தூர் ஸ்ரீ நிதீஸ்வரர் கோயில், அந்நியர் படையெடுப்புகளின்போது

தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற வேறு வழியின்றி மண்மூடி மேடாக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவித்தனர் தொல்லியல் அறிஞர்கள்.

**செயற்கரிய செயல் செய்த அன்னம்புத்தூர் மக்கள்!**

உலக பாரம்பரியச் சின்னமான தஞ்சை பெரிய கோயிலின் மூலம் இன்றும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் கோலோச்சிக் கொண்டிருக்கும் கோப்பரகேசரி மன்னர் ராஜராஜசோழரின் கல்வெட்டுடன் கூடிய திருக்கோயில் தாங்கள் பிறந்த மண்ணில் கண்டெடுக்கப்பட்டதை எண்ணி, அன்னம்புத்தூர் மக்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். இத்தனைக் காலம் மண்ணில் மறைந்திருந்த மாமணிச் சோதியனுக்கு, அழகிய திருக்கோயிலை நிர்மாணிக்க உறுதிபூண்ட இவர்கள், அதற்கான பணிகளை உடனடியாக ஆரம்பித்தனர்.

ஈசன் மீது எல்லையில்லாத பக்தி கொண்ட இந்த அன்பர்கள், தாங்கள் பிறந்த மண்ணில் ஈசனின் திருக்கோயிலை மீண்டும் நிர்மாணிப்பது தங்களது பிறவிப்பேறு என்பதைக் கருத்தில் கொண்டு, ஆலய நிர்மாணப் பணிகளுக்காக "*SRI NIDHEESWARAR TEMPLE TRUST*" என்ற அமைப்பினை ஏற்படுத்தி அதன் மூலம் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தனர்.

மனதாலும், உடலாலும் ஈசனை மெய்யன்போடு கசிந்துருகி வழிபடும் அன்னம்புத்தூர் மக்களின் எளிமையான பக்தியினால் திருவுள்ளம் மகிழ்ந்த ஈசனின் திருவருளால் புனரமைப்புப் பணிகளுக்கான போதிய நிதி உதவி தமிழகம் மற்றும் உலகெங்கிலும் உள்ள அன்பர்களிடமிருந்து கிடைத்தது. பழமை மாறாமல் இத்திருக்கோயில் புனரமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இத்திருக்கோயிலை முழுவதும் கற்றளியாக நிர்மாணித்தது சிறப்பான முயற்சியாகும்.

இம்மானிடப் பிறவி மறைந்தாலும் என்றும் மறையாமல் இருப்பது ஒருவர் தங்கள் வாழ்நாளில் செய்த தானமும், தர்மமும், இறைவனுக்குச் செய்த திருத்தொண்டுமே என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்த அன்னம்புத்தூர் மக்கள், தங்களின் வருங்கால சந்ததியினருக்காகத் தாங்கள் வாழ்ந்த நல்வாழ்வின் தடம் பதிக்கும் முயற்சியில் திருப்பணிகளை இனிதே முடித்து *9.4.2014* அன்று மஹா கும்பாபிஷேக வைபவத்தை மிகவும் சிறப்பாக நடத்தி முடித்தனர். ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமான் அருளும் பிள்ளையார்பட்டியின் **சிவாச்சாரியார் ஸர்வசாதகர் ஸ்ரீ பிச்சை குருக்கள்** இந்த கும்பாபிஷேகத்திற்கு யாகசாலைப் பொறுப்பேற்று பிரமாண்டமாகவும் சாந்நித்தியத்துடனும் நடத்திவைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

கும்பாபிஷேக நாள் அன்று மாலை தேவாதி தேவர்களும், மகரிஷிகளும் கண்டு மகிழ்ந்த பார்வதி–பரமேஸ்வரனின் திருக்கல்யாண வைபவமும் இத்தலத்தில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டு, மண் மேட்டில் நின்ற மாமணிச்செல்வன் மணவிழாக் கோலத்தில் தன் தேவி அன்னை ஸ்ரீ கனக திரிபுரசுந்தரி சமேதராக மாடவீதிகளில் அசைந்தாடி வலம் வருவதைக் கண்டு



கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக வழிபட்டனர் அன்னம்புத்தூர் மக்கள்.

திருப்பணிகள் தொடங்கும் முன்னரே, இத்திருக்கோயிலின் தல வரலாற்றினை ஒரு பிரபல வார இதழில் எழுதும் பாக்கியத்தை அளித்து, அன்னம்புத்தூர் மக்களோடு இம்மாபெரும் திருப்பணிக்கு அடியேனையும் ஒரு கருவியாகப் பயன் படுத்திக் கொண்ட ஈசனுக்கு அடியேன் நன்றி தெரிவித்து மகிழ்ந்த நன்னாள் இது!

**நான்முகனுக்கு அருளிய நிதீஸ்வரப் பெருமான்!**

**அன்னமூர்த்தி, அன்னவாகனன்** என்று பக்தர்களால் பூஜிக்கப்படுபவர் பிரம்மதேவன். அடிமுடிகாணா அண்ணாமலையில் ஈசனின் முடியைக் கண்டதாக பொய்யுரைத்தார் பிரம்மதேவன். பொய்யுரை புனைந்ததால் உலக உயிர்களை நான்முகனால் சிருஷ்டிக்க இயலவில்லை. மனம் வருந்திய நான்முகன் தனக்கு ஏற்பட்ட இழுக்கு தீர திருக்கயிலை நாதனின் திருத்தாள் பணிவதே சிறந்த வழி என்பதை உணர்ந்து தனது திருக்கரங்களால் ஈசனை பிரதிஷ்டை செய்து, இழந்த தகுதியை மீண்டும் பெற ஈசனைக் குறித்து நீண்ட நாட்கள் கடும் தவமியற்றினார். ஈசனின் நித்ய பூஜைகளுக்காக பிரம்ம தீர்த்தத்தை அமைத்து சிவனாருக்குத் திருமேனி குளிர அபிஷேகம் செய்வித்தார்.

ஆலகாலவிடம் உண்டு அகிலம் காத்த அண்ணல், அன்னவாகனனான பிரம்மதேவனின் பக்திக்கும் மனமிரங்கி அவருக்கு ஏற்பட்ட இழுக்கு தீர அருள்புரிந்தார். ஈசன் அருள் பெற பிரம்மதேவன் தவமிருந்த இத்தலம் அன்று முதல் **அன்னம்புத்தூர்** என்று பக்தியோடு பூஜிக்கப்படுகின்றது.

இத்தலத்தில் நான்முகன் வழிபட்டதற்கு ஆதாரமாகப் புராதனமான பிரம்மதேவனின் திருவுருவச்சிலை இத்தலத்தில் உள்ள செல்லியம்மன் கோயிலில் காணப்படுவது அரிய தரிசனமாகும்.

**செல்வவளம் பெற்ற குபேரன்!**

பதுமநிதி, மகாபதுமநிதி, மகாநிதி, கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தநிதி நீலநிதி மற்றும் சங்கநிதி போன்ற எட்டு வகையான நிதிச் செல்வங்களுக்குத் தலைவன் குபேரன். இச்செல்வங்களின் தலைவன் என்பதால் குபேரனுக்கு **நிதிபதி** என்ற திருநாமமும் உண்டு. தனக்கு எப்போதும் அள்ள அள்ளக் குறையாத செல்வங்களை வழங்கவேண்டும் என குபேரன் அன்னம்புத்தூர் ஈசனை வணங்கி நீங்காத செல்வம் நிலைக்கப்பெறும் பேறினைப் பெற்றதால் ஈசனுக்கு **ஸ்ரீ நிதீஸ்வரர்** என்ற திருநாமம் ஏற்பட்டுள்ளதை



**கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்!**

அன்னம்புத்தூர் திருக்கோயிலில் ஆதியும் அந்தமும் இல்லாத ஸ்ரீ நிதீஸ்வரப்பெருமானின் பிரம்மாண்ட லிங்கத்திருமேனி காணக்காணத் திகட்டாத பேரின்ப தரிசனமாகும்.

திருவையாறு திருத்தலத்திலே திருக்கயிலைக் காட்சியைக் கண்டு நெகிழ்ந்த திருநாவுக்கரசர் பெருமான், **“காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன், கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்”** என்று பக்திப் பெருக்குடன் பரவசப்பட்ட அதே அனுபவம் அன்னம்புத்தூர் நிதீஸ்வரப்பெருமானைத் தரிசிக்கும் எல்லா அன்பர்களுக்கும் ஏற்படுவது சிலிர்ப்பான அனுபவமாகும்.

திங்கள்கிழமை, திருவாதிரைத் திருநாள், பூசநட்சத்திரம், அட்சய திருதியை மற்றும் தீபாவளிப் பண்டிகையின்போது இத்தல ஈசன் நிதீஸ்வரப்பெருமானுக்கு மிகவும் விசேஷமாக **ஸ்வர்ண புஷ்ப அர்ச்சனை** செய்யப்படுகின்றது. இந்த நாள்களில் பக்தர்கள் பெருமளவில் வந்து இத்தல ஈசனை ஸ்வர்ண புஷ்ப அர்ச்சனை செய்து வழிபடுகின்றனர்.

ஐப்பசி அன்னாபிஷேகம் இத்தலத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறும். பிரம்மாண்டமான லிங்கத் திருமேனிக்கு அன்னம் சாற்றி வழிபடுவதை தரிசிக்க ஆயிரக்கணக்கில் பக்தர்கள் குவிகின்றனர். ஈசனுக்கு சாற்றிய இந்த அன்னத்தைப் பிரசாதமாக அருந்த **அன்னத்வேஷம்** (அன்னத்தின் மீது வெறுப்பு) விலகுவதோடு நாள்பட்ட நோய்களும் குணமாகும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

**ஸ்ரீ கனக திரிபுரசுந்தரி!**

இத்தலத்தின் அம்பிகை **ஸ்ரீ கனக திரிபுரசுந்தரி** என்ற திருநாமத்துடன் வணங்கப்படுகின்றாள். கருணையே வடிவமாகக் கொண்ட அம்பிகை ஸ்ரீ கனக திரிபுரசுந்தரியை செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் புதுப்புடவை சாற்றி நெய்தீபம் ஏற்றி வழிபட மணமாகாத மங்கையர்களுக்கு விரைவில் திருமணம் கைகூடும்.

மழலைப்பேறு இன்றி வருந்தும் அன்பர்கள் தம்பதி சமேதராக இத்தலத்திற்கு வந்து ஸ்ரீ கனக திரிபுரசுந்தரி அம்பிகையைத் தரிசிக்க அவர்களது இல்லங்களில் விரைவில் மழலைஒலி கேட்க ஆசீர்வதிப்பாள் அம்பிகை.



மழலை வரம் வேண்டுவோர் இத்திருக் கோயிலுக்குச் செல்லும்போது சிறிதளவு சுத்தமான வெண்ணெய் கொண்டு செல்ல வேண்டும். இந்த வெண்ணெயை அம்பாளின் திருப்பாதத்தில் வைத்து அர்ச்சனை செய்து அளிப்பார் திருக்கோயிலின் சிவாச்சாரியார். பின்னர் திருக் கோயிலை மூன்று முறை வலம் வந்து இந்த வெண்ணெய் பிரசாதத்தை தம்பதியர் அருந்த அவர்கள் மழலை பாக்கியம் பெறுவது உறுதி என்று தெரிவிக்கின்றனர் இத்தல அன்பர்கள்.

நவராத்திரி விழாவின்போது அம்பிகை ஸ்ரீ கனக திரிபுரசுந்தரிக்கு ஒன்பது தினங்களும் சிறப்பு அலங்காரம் மற்றும் ஸஹஸ்ரநாம அர்ச்சனை மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றது. நவராத்திரி விழாவின்போது இத்தலத்தில் நடைபெறும் **மஹா சண்டி ஹோமம்** மிகவும் விசேஷமாகும். இத்தலத்தில் நடைபெறும் இந்த மஹா சண்டி ஹோமத்தில் கலந்து கொள்ள வறுமை நீங்கி வாழ்வில் வளம் பெருகும்.

**ராஜகோபுரத் திருப்பணி!**

ஸ்ரீ நிதீஸ்வரப் பெருமானுக்குத் திருத்தலம் அமைத்து இரண்டு கால பூஜைகளை மிகச் சிறப்பாகச் செய்து வரும் ஸ்ரீ நிதீஸ்வரர் டெம்பிள் டிரஸ்ட் உறுப்பினர்களுக்கு இத்தலத்திற்கு ராஜகோபுரம் அமைத்துப் பார்க்க வேண்டும் என்பது கனவாக உள்ளது. ஆகம சாஸ்திர விதிகளின்படி ஒரு ஆலயத்திற்கு ராஜகோபுரம் இருக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

திருக்கோயிலுக்கு மகுடம் போன்ற இந்த ராஜகோபுரத் திருப்பணி விரைவிலேயே நடைபெற நிதீஸ்வரப் பெருமானின் திருவருளையும் நல்ல மனம் படைத்த அன்பர்களின் நிதியுதவியையும் எதிர்பார்த்துக் காத்திருக் கின்றனர் அன்னம்புத்தூர் மக்கள். குபேரனுக்கே அருள்புரிந்த சிவனார், புராதனமான இத்தலத்தின் ராஜகோபுரத் திருப்பணிக்குத் துணை நிற்கும் அன்பர்களின் குடும்பம் தழைத்தோங்கவும் திருவருள் புரிவார். பல தலை முறைகளுக்குப் புண்ணியம் தரும் புனிதப்பணி இத்திருப்பணி!

இத்தலம் பற்றிய மேலும் விபரங்கள் பெற கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். **ஸ்ரீ நிதீஸ்வரர் டெம்பிள் டிரஸ்ட், *20/21*, நியூ காலனி மெயின் ரோடு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை-*600015*. அலைபேசி: *9444036534, 9443044556*.**

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் நகருக்கு அருகில், திண்டிவனம் to விழுப்புரம் செல்லும் சாலையில் தென்பசியார் என்னும் ஊரிலிருந்து 6 கி.மீ தொலைவில் உள்ளது அன்னம்புத்தூர் ஸ்ரீ நிதீஸ்வரர் திருத்தலம்.

Printed Books



முன்னூர் கோ. இரமேஷ், திண்டிவனத்திற்கு அருகிலுள்ள முன்னூர் என்ற கிராமத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர் திரு ச.கோதண்டராம் திருமதி கோ. சரோஜா. இளமைக் காலம் முதலே பக்தியுணர்வுடன் வளர்ந்த இவர் திண்டிவனம் ஆ.கோவிந்தசாமி அரசுக் கலைக் கல்லூரியில் இயற்பியலில் இளமறிவியல் பட்டமும் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் சட்டமும் பயின்றவர்.

தமிழக அரசின் கூட்டுறவுத் துறையிலே கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளராகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார். விடுமுறை நாள்களிலும் ஓய்வு நேரங்களிலும் புராதனமான திருத்தலங்களைத் தேடிச் சென்று தரிசிப்பதில் ஆர்வம் உள்ள இவர் அவ்வாறு சென்று தாம் தரிசிக்கும் தலங்களைப் பற்றிய விபரங்களைத் தனது முக நூலிலும் "முன்னூர் ரமேஷ் பக்கங்கள்" என்ற இவரது இணைய தளத்திலும் பதிவிட்டு வருகின்றார்.

பக்தி உணர்வு மேலிட இவர் எழுதும் திருத்தலங்கள் பற்றிய ஆன்மீகக் கட்டுரைகள் பிரபல பத்திரிகைகளில் வெளிவந்து பலரது பாராட்டுகளைப் பெற்றுள்ளன. பல புராதனமான தலங்களின் புனரமைப்புப் பணிகளுக்குத் தம் நண்பர்கள் உதவியுடன் இவர் செய்துள்ள திருப்பணிகளும் இவரது சொந்த கிராமமான முன்னூரில் அமைந்துள்ள ஸ்ரீபெருந்தேவித்தாயார் சமேத ஸ்ரீஅருளாளப் பெருமான் திருக்கோயில் புனரமைப்புப் பணிகளுக்காக இவர் மேற்கொண்ட முயற்சிகளும் அனைவராலும் பாராட்டப்படுகின்றன.

ISBN 978-81-940154-5-1

தமிழ் திசை

புண்ணியம் தேடுவோமே..!
விலை: ₹160